# மார்ச் - 08 - புதன்

## புனித இறை அருளப்பர்

**கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார்: யோனா. 3:10**

------------------------------------------------------------------------------------------------------------------------

## முதல் வாசகம்: யோனா 3 : 1 – 10

அக்காலத்தில் இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவர், "நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய், நான் உன்னிடம் சொல்லும் செய்தியை அங்குள்ளோருக்கு அறிவி" என்றார். அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவேக்குச் சென்றார். நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக் கடக்க மூன்று நாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று, ஒரு நாள் முழுதும் நடந்தபின், உரத்த குரலில், "இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று அறிவித்தார். நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர். இந்தச் செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல் மீது உட்கார்ந்தான். மேலும் அவன் ஓர் ஆணை பிறப்பித்து அதை நினிவே முழுதும் பறைசாற்றச் செய்தான். இதனால் அரசரும் அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவதுஇ எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக்கூடாது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது. மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும் தம் தீயவழிகளையும், தாம்செய்துவரும் கொடுஞ் செயல்களையும் விட்டொழிக்க வேண்டும். இவ்வாறு செய்தால், கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக் கொள்வார். அவரது கடுஞ்சினமும் தணியும் நமக்கு அழிவு வராது." கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார் தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை.

**பதில்பாடல்:** நொறுங்கிய உள்ளத்தை இறைவா நீர் அவமதிப்பதில்லை

## நற்செய்தி: லூக்கா 11 : 29 – 32

அந்நாட்களில் மக்கள் வந்து கூடக்கூட இயேசு கூறியது: "இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தைத்தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருந்ததைப் போன்று மானிட மகனும் இந்தத் தலைமுறையினருக்கு அடையாளமாய் இருப்பார். தீர்ப்புநாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால் இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா!" என்றார்.

**தியானம்:** அவசரமான உலகம். வேகமான முன்னேற்றம். எதையும் உடனடியாகப் பார்க்க வேண்டும், பேசவேண்டும் அல்லது பார்த்துத்தான் பேசவேண்டும் என்ற நிலைக்கு விஞ்ஞானம் நம்மைக் கொண்டு சென்றிருக்கும் காலம். **Whats up, youtube, face book** போன்ற ஊடகங்களில் கடவுளையும், காட்சிகளையும், புதுமைகளையும் காணத்துடிக்கும் காலம். இவைகளில் ஏதாவது ஒன்றில் கடவுளை நான் கண்டால் நம்பமாட்டேனா? எனக்குக் காட்சி தந்தால் நான் மனம்மாறமாட்டேனா? என்றுகூட எண்ணத் தோன்றுகின்ற அளவுக்கு நம் வாழ்க்கை முறை மாறிவிட்ட காலமிது. இந்நிலையைப் பயன்படுத்தி, நம்மைக் கடவுள் நம்பிக்கையிலிருந்து திசைதிருப்பி, நமது வாழ்க்கை முறைகளை அடிக்கடி மாற்றி அதன் மூலம் தாம் பணம் சம்பாதிக்கும் முயற்சியில் பற்பல தீய சக்திகளின் இடைவிடாத முயற்சிகள். இத்தனைக்கும் மத்தியில் நம்மைப் படைத்த கடவுளையும் அவர் நமக்குத் தரும் செய்திகளையும், வாசிக்க, வாசித்துத் தியானிக்க நமக்கெங்கே நேரமுண்டு? நமது வாழ்வின் ஒவ்வொரு கணமும் நாம் மனம் திரும்பக் கடவுள் தரும் கால அவகாசமாகும். நாம் அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே செல்லுகின்றோமா? இதோ! மீண்டும் ஒரு தவக்காலம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அருமையான சந்தர்ப்பம். இன்றைய இறைவார்த்தைகள் நமக்குக் கடவுள் தரும் இறுதி எச்சரிக்கையாகக்கூட இருக்கலாம். சிந்திப்போம்! செயல்படுவோம்!